FWC

# தவணைப் பரீட்சை, யூலை- 2017
# Term Examination, July- 2017

| தரம் :- 12 (2018) | பொருளியல் | நேரம் :- மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

**கவனத்திற்கு :**

- **எல்லா வினாக்களுக்கும் விடைதருக**
- **சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க**

1) பின்வருவனவற்றில் நியமப் பொருளியல் கூற்றாகக் அமைவது எது
   1. கடந்த மாதம் நுகர்வோர் விலைச்சுட்டெண் 5.6% என அதிகரித்துள்ளது
   2. வருமான சமமின்மை நாட்டின் வளர்ச்சிக்கு தீங்கானது
   3. கடன் மீதான சராசரி வட்டி வீதம் 8.6% ஆக உள்ளது
   4. வருடாந்த வீதமாக 2.6% படி பொருளாதாரம் வளர்கின்றது
   5. அனைத்தும் சரியானவை

2) ஊழிய நிரம்பல் கோட்டின் வலப்புற நகர்வில் செல்வாக்கு செலுத்தாத காரணி பின்வருவனவற்றுள் எது?
   1. சனத்தொகை அதிகரிப்பு
   2. கூலி அதிகரிப்பு
   3. ஊழியப்படையில் ஏற்படும் அதிகரிப்பு
   4. பால் நிலை சமத்துவம் இன்மை நீங்குதல்
   5. சனத்தொகையின் வயதமைப்பில் இளைஞ்ஞர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்

3) பின்வருவனவற்றில் தவறான கூற்றாக நீா் எதனைக் கருதுவீா்
   1. சந்தையொன்று இடம்பெறுவதற்கு கொள்வனவாளா், விற்பனையாளா், செயற்திறனான தொடா்பாடல் என்பன அவசியம்
   2. கேள்வித் தொகை என்பது பாய்ச்சல் மாறி
   3. அருமை என்பது வளங்களின் வரையறையை குறிக்கும்
   4. விலைக்கும் கேள்வித் தொகைக்கும் இடையிலான தொடா்பினைக் காட்டுவது கேள்வி விதி ஆகும்.
   5. கொள்வனவு செய்வதற்கான விருப்பம், கொள்வனவு சக்தியும் கொண்ட ஒருவரின் கொள்வனவுத் திட்டம் செயற்படு கேள்வி ஆகும்.

4) வளங்கள் அருமையானதாகவும் பூரண மாற்றுப்பயன்பாடு அற்றதாகவும் இருப்பதனால் உற்பத்தி சாத்திய வளையி
   1. நிலையான அமையச்செலவுடன் மூலத்துக்கு குவிவாக அமைகின்றது
   2. அதிகரித்துச் செல்லும் அமையச்செலவுடன் உற்பத்தி தானத்தை நோக்கி குவிவாக அமைகின்றது
   3. மேல் நோக்கி சரிவதுடன் மூலத்துக்கு குழிவாக அமைகின்றது
   4. கீழ் நோக்கி சரிவதுடன் வெளிநோக்கி குவிவாக அமைகின்றது.
   5. குறைந்து செல்லும் அமையச் செலவுடன் மூலத்துக்கு குவிவாக அமைகின்றது

5) பின்வரும் கூற்றுக்களில் சந்தைப்பொருளாதாரத்தின் பிரதான இயல்பொன்றினை விபரிக்கும் கூற்று எது?

1. அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட ஒரு பொதுத்திட்டத்துக்கு அமைய, நிறுவனங்கள் பொருளுற்பத்தி பற்றி தீர்மானித்தல்.
2. வெவ்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்கிடையே சாதனங்களின் பயன்பாட்டினை சந்தையின் ஊடாக இயக்கும் சார்பு சார்புவிலைகள் நிர்னயித்தல்
3. உற்பத்தி தொடர்பான ஊழியச் செறிவான முறைகள் பயன்படுத்துதல்
4. எப்போதும் கேள்வி நிரம்பல் சக்திகளினால் விலைகள் நிர்ணயிக்கப்படுதல்
5. உற்பத்தியாளர் விருப்பப்படி உற்பத்தி இடம்பெறல்

6) பின்வருவனவற்றுள் தாராள சந்தைப்பொருளாதாரம் தொடர்பில் பிழையானது எது?

1. விலை,பொருளாதாரத்தில் உள்ள போட்டித் தன்மை கொண்ட துறைகள் மத்தியில் வளங்களை சமனாக ஒதுக்கீடு செய்கின்றது
2. விலை, பொருட்கள் சேவைகளின் சார்பளவு அருமைத்தன்மை மகளையும் அவற்றின் உற்பத்திச் செலவுகளையும் வெளிப்படுத்துகின்றது
3. சார்பு விலை மாற்றங்கள் உற்பத்தி நிறுவனங்களின் இலாபங்களைத் தீர்மானிக்கும் ஒரு காரணியாக உள்ளதுடன் அதன் காரணமாக அவை உற்பத்தியை ஊக்குவிப்பதில் அல்லது அதை அதிகரிப்பதில் செல்வாக்கு செலுத்தும்
4. விலைகள், பொருட்கள் சேவைகளின் பொருட்டு நுகர்வோர் செலுத்தத் தயாராகவுள்ள விருப்பத்தின் அளவீடாகும்
5. விலைகள், ஒரு பண்டத்தை பெற்றுக்கொள்ள நுகர்வோர் எவ்வளவு விட்டுக்கொடுக்க வேண்டும் என்பதற்கான சமிக்ஞை வழங்குகின்றது.


7) சாதார பொருள் ஒன்றின் விலை அதிகரிக்கும் போது

1. விலை விளைவு நேர்கணியம், வருமான விளைவு நேர்கணியம், பதிலீட்டு விளைவு நேர்கணியம்.
2. விலை வளைவு எதிர்கணியம், வருமான விளைவு எதிர்கணியம், பதிலீட்டு விளைவு எதிர்கணியம்.
3. விலை விளைவு நேர்கணியம், வருமான விளைவு எதிர்கணியம் நேர்கணியம், பதிலீட்டு விளைவு நேர்கணியம்.
4. விலை விளைவு எதிர்கணியம், வருமான விளைவு எதிர்கணியம், பதிலீட்டு விளைவு நேர்கணியம்.
5. விலை விளைவு நேர்கணியம், வருமான விளைவு எதிர் கணியம், பதிலீட்டு விளைவு எதிர்கணியம்

8) குறித்த பொருளின் விலை 5 ரூபாவில் இருந்து 4 ரூபாவாக வீழ்ச்சியடைந்த போது அப்பண்டத்தின் கேள்வித் தொகை 20 அலகுகளில் இருந்து 30 அலகுகளாக அதிகரித்தது எனக் கொள்வோம் இந் நிலையில் முறையே விலைவிளைவு, வருமன விளைவு மற்றும் பதிலீட்டு விளைவு ஆகியவற்றினைக் காட்டும் தொகுதி யாது ?

| இல. | விலைவிளைவு | வருமான விளைவு | பதிலீட்டு விளைவு |
|---|---|---|---|
| 1 | 20 | 15 | 5 |
| 2 | 10 | 5 | 5 |
| 3 | -10 | -15 | 5 |
| 4 | 5 | -10 | 15 |
| 5 | 25 | 10 | 15 |

9) அருகில் தரப்பட்டுள்ள வரைபடத்துக்கு பொருத்தமான கேள்வி நிரம்பல் சமன்பாட்டினை சரியாக காட்டுவது.




1. Qd = 50 – 5p ,   Qs = 10 + 5p
2. Qd = 150 – 10p ,   Qs = -10 + 5p
3. Qd = 50 – 5p ,   Qs = -10 + 5p
4. Qd = 75 – 5p ,   Qs = 25+ 5p
5. Qd = -50 – 5p ,   Qs = -10 + 5p

10) Qs = 100 + 5p என்னும் நிரம்பல் சமன்பாட்டினைக் கருதுக ஒவ்வொரு விலையிலும் நிரம்பல்தொகை 50 வீதத்தினால் அதிகரிப்பின் புதிய நிரம்பல் சமன்பாடு யாது ?

1. Qs = 150 + 7.5p
2. Qs = - 50 + 7.5p
3. Qs = 150 + 12.5p
4. Qs = -150 + 7.5p
5. Qs = 100 + 12.5p

11) குறிப்பிட்ட பொருள் ஒன்றின் விலை 10 ரூபாவாகக் காணப்பட்ட போது நுகர்வோன் செலவு 1000 ரூபா ஆகும். விலை கேள்வி நெகிழ்ச்சி -2 ஆகவும் காணப்பட்டது. குறிப்பிட்ட பொருளின் விலை 25 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது எனின் தற்போது புதிய கேள்வித்தொகை மற்றும் நுகர்வோன் செலவை காட்டும் தொகுதியாது முறையே?


1. 50,1500
2. 150 , 1250
3. 150, 1125
4. 50 , 1125
5. 200 , 2000

The National e-learning Portal for The General Education

12) குறிப்பிட்ட பொருளின் விலை கேள்வி நெகிழ்ச்சி - 0.5, குறிப்பிட்ட பொருளின் விலை 20 ஆகும் எனின் குறிப்பிட்ட பொருளின் ஆகக் கூடிய விற்பனை விலை யாது?

1. 60
2. 40
3. 120
4. 20
5. 130

13) பண்டம் ஒன்றை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர் மீது அலகு வரியினை அரசு விதித்த பின்னர் ஏற்பட்ட தாக்கங்களை பின்வரும் வரைபடம் விளக்குகின்றது





பின்வருவனவற்றில் சரியானது எது

| இல. | புதியநுகர்வோன் மிகை | புதிய உற்பத்தியாளன் மிகை | வரியின் மிகைச் சுமை |
|---|---|---|---|
| 1 | A + B + C | D + E + F + H + G | B +C |
| 2 | A | H + G | C + F |
| 3 | D + E + F + H + G | A + B + C | D + E + F |
| 4 | B + C | C + F | D + E + F |
| 5 | H + I | A | C + F |

The National e-learning Portal for the General Education

14) பண்டம் ஒன்றினை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளருக்கு அரசாங்கம் மானியம் வழங்கும்போது ஏற்படும் தாக்கத்தினை கீழ் உள்ள வரைபடம் காட்டுகின்றது




பின்வருவனவற்றில் சரியான தொகுதி எது

| இல. | மானியத்தின் பின் நுகர்வோன் தாங்கும் விலை | மானியத்தின் பின் உற்பத்தியாளன் தாங்கும் விலை | புதிய நுகர்வோன் மிகை | புதிய உற்பத்தியாளன் மிகை |
|---|---|---|---|---|
| 1 | $OP_1$ | $OP_3$ | A + B+C+E+J | L+H+C+B+D |
| 2 | $OP_2$ | $OP_3$ | A | L |
| 3 | $OP_1$ | $OP_0$ | L+H+C+B+D | A + B+C+E+J |
| 4 | $OP_0$ | $OP_3$ | A+B | L+H+C |
| 5 | $OP_3$ | $OP_0$ | L | A |

15) குறிப்பிட்ட பொருளின் வெளியீடு 10 அலகாக இருக்கும் போது சராசரி மாறும் செலவு ரூபா 30 ஆகும் வெளியீட்டினை மேலும் 10 அலகுகளால் அதிகரித்த போது எல்லைச் செலவு 10 ஆகும். எனின் 20 அலகு வெளியீட்டில் சராசரி மாறும் செலவு யாது?
1. 40 2. 20 3. 12.5 4. 15 5. 30

16) அரிசி உற்பத்தி நிறுவனம் ஒன்று 300 அரிசிப் பொதிகளை ரூபா 40 அடிப்படையில் விற்பனை செய்கின்றது. இந் நிறுவனத்தின் சராசரி மொத்தச் செலவு 45. சராசரி மாறும் செலுவு ரூபா 35 ஆகும். குறுங்காலத்தில் இந்த நிறுவனம்.
1. தொடர்ந்தும் உற்பத்தியினை மேற்கொள்ளும்
2. உற்பத்தி மேற்கொள்வதை நிறுத்தும்
3. நிகழ்காலத்தில் நிறுத்தி எதிர்காலத்தில் மீண்டும் ஆரம்பிக்கும்
4. அசாதாரன இலாபம் உழைகின்றது
5. நட்டம் அனுபவிக்கின்றது, அனுபவிக்கும் நட்டம் நிலையான செலவை விட உயர்வானதாகும்.

17) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியினைப் பிரதிபலிக்கும் போக்கினைச் சரியாக காட்டுவது?
1. அதிகரித்துச் செல்லும் சராசரி மாறும் செலவு
2. மொத்த உற்பத்தி அதிகரித்துச் செல்வது
3. எல்லைச் செலவு குறைந்து செல்வது
4. குறைந்து செல்லும் சராசரி மாறும் செலவு
5. வீழ்ச்சியடைந்து செல்லும் எல்லை உற்பத்தி

18) கீழே தரப்படுவது கருதுகோள் ரீதியான பேரினப் பொருளாதாரத் தரவுகள் ஆகும்

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | - | 25000 |
| வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானம் | - | (-750) |
| மூலதன நுகர்வு | - | 5000 |
| தேறிய நேரில் வரி | - | 1000 |

இத் தகவல்களின் அடிப்படையில் அடிப்படை விலை மொத்தப் பெறுமதி கூட்டனினை கணிப்பிடுக?
1. 30000 2 25750 3. 26000 4. 24000 5. 26000

19) அடிப்படை விலை தேறிய பெறுமதி கூட்டலினை சந்தை விலை மொத்த தேசிய உற்பத்தியாக மாற்றுவதற்கு

| இல. | பெறுமானத்தேய்வு | வெளிநாட்டில் இருந்தான தேறிய காரணி வருமானம் | நேரில் வரி | மானியங்கள் |
|---|---|---|---|---|
| 1 | கழி | கூட்டு | கழி | கூட்டு |
| 2 | கூட்டு | கழி | கூட்டு | கூட்டு |
| 3 | கூட்டு | கூட்டு | கூட்டு | கழி |
| 4 | கழி | கழி | கழி | கழி |
| 5 | கழி | கூட்டு | கழி | கழி |

20) கற்பனையான பொருளாதாரம் ஒன்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1850 மில்லியன், தேறிய உள்நாட்டு வருமானம் 1600 மில்லியன், தேறிய நேரில் வரி 200 மில்லியன் எனவும் கருதிக்கொள்க இப்பொருளாதாரத்தில் மூலதன நுகர்வின் பெறுமதியை சரியாகக் காட்டுவது.
1. 50 2. 100 3. 150 4. 25 5. 75

## பகுதி - II

- கவனத்திற் கொள்க :
- ஒரு பகுதியில் இருந்து ஆகக் குறைந்தது இரண்டு வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடைதருக.

## பகுதி –I

1)

1. எந்தவொரு நாடும் தீர்வு காணமுடியாத பிரச்சனை யாது? விளக்குக? (புள்ளி – 04)
2. பொருளாதாரம் அல்லாப் பண்டம் எத்தகய சந்தர்ப்பத்தில் பொருளாதாரப் பண்டமாக மாற்றமடையும்? அத்தகைய சந்தர்ப்பங்கள் நான்கு தருக? (புள்ளி – 04)
3. ஊழிய நிரம்பல் கோட்டின் வலப்புற நகர்வினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை? (புள்ளி – 04)
4. மூலதனவாக்கம் மூலதனம் என்பவற்றை வேறுபடுத்துக? (புள்ளி – 04)
5. காரணி விளைதிறனைத் தீர்மானிக்கும் காரணிகளைப் பட்டியல்படுத்துக? (புள்ளி – 04)

2)

1. பொருளாதார முறைமையின் தொழிற்பாடுகள் யாவை? (புள்ளி – 03)
2. பொருளாதார முறைமையின் செயற்திறனை அளவிடப் பயன்படும் குறிகாட்டிகள் எவை? (புள்ளி – 05)
3. அடிப்படைப் பொருளாதாரப்பிரச்சனைகள் எல்லா நாடுகளுக்கும் பொதுவானதாக இருக்கின்ற போதிலும் அப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு உருவாக்கப்பட்ட பொறிமுறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுவதற்கான காரணங்கள் யாவை? (புள்ளி – 03)
4. "யாருக்காக உற்பத்தி செய்தல் என்ற பிரச்சனை காரணி விலை வேறுபாட்டுடன் தொடர்புடைய ஒரு பிரச்சனை ஆகும்" விளக்குக? (புள்ளி – 04)
5. கலப்புப் பொருளாதாரத்தில் சமூக நீதியை ஏற்படுத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் செயற்பாடுகள் யாவை? (புள்ளி – 05)

3)

1. உற்பத்திச் சாத்திய வளைகோட்டுக்கு வெளியில் உள்ள புள்ளியில் ஒரு நாடு உற்பத்தியினை மேற்கொள்ள முடியுமா? விளக்குக? (புள்ளி – 04)
2. பின்வரும் நிகழ்வுகளை உற்பத்திச் சாத்திய வளைகோட்டில் குறித்துக்காட்டுக?
   அ) நாட்டில் புத்தாக்கம் இடம்பெறுதல்
   ஆ) காலநிலை சீர்கேட்டினால் விவசாய உற்பத்தி பாதிக்கப்படுதல்
   இ) மனிதமூலதன அபிவிருத்தி இடம்பெறல்
   ஈ) பொருளாதாரப் பூரிப்பு
   உ) நாட்டின் வேலையற்ற பட்டதாரிகளில் ஒரு பகுதியினர் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளுதல் (புள்ளி – 05)
3. நடைமுறைக்கு பொருத்தமான உற்பத்திச் சாத்திய வளைகோட்டின் வடிவத்தினைத் தீர்மானிக்கும் மூன்று பிரதான காரணங்களும் எவை? (புள்ளி – 03)

4. அரிசி, சோளம் ஆகிய இருபொருட்களை உற்பத்தி செய்யும் நாடு ஒன்றின் உற்பத்தி சேர்க்கை பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| சோளம் உற்பத்திக்காக விட்டுக்கொடுக்கப்பட்ட அரிசி உற்பத்தியின் அளவு | சோழம் உற்பத்தி (அலகு) |
|---|---|
| - | 0 |
| 20 | 20 |
| 40 | 40 |
| 60 | 60 |
| 80 | 80 |
| 100 | 100 |

மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

அ) சோளம் உற்பத்தி 0, 20, 40, 60, 80, 100 என இருக்கும் போது முறையே அவ் வெளியிட்டுக்கான அரிசி உற்பத்தியாது? (புள்ளி - 03)

ஆ) நிலைக்குத்தச்சில் அரிசி உற்பத்தியும், கிடையச்சில் சோழம் உற்பத்தியும் அமையும் வகையில் உற்பத்திச் சாத்திய எல்லையை வரைக? (புள்ளி – 03)

இ) 180 அலகு அரிசியினை உற்பத்தி செய்யும் போது 60 அலகு சோளத்தினை உற்பத்தி செய்ய நாடு தீர்மானிக்குமாயின் நாடு எதிர்கொள்ளும் பிரச்சனை என்னவென்பதை விளக்குக? (புள்ளி - 02)

4)

1. நுகர்வோர் நலன் கருதி அரசினால் அமுல்படுத்தப்படும் விலைத்திட்டம் யாது? சுருக்கமாக விளக்குக? (புள்ளி – 04)
2. மேற்படி கொள்கையினை செயற்திறனாக அமுல்படுத்த மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் எவை? (புள்ளி – 04)
3. போட்டிச் சந்தையொன்றில் அரிசிக்கு நிலவிய கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு.

$Qd = 13000 - 500p$ $Qs = -2000 + 1000p$

மேற்படி சமன்பாட்டைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

அ) சந்தை சமநிலை விலை, தொகை யாது?

ஆ) சமநிலையில் நுகர்வோன் உற்பத்தியாளன் மிகை யாது?

இ) பொருளாதார மிகை யாது?

அரசாங்கம் உற்பத்தியாளரின் நலனை அதிகரிக்கும் நோக்குடன் ரூபா 12 இனை உத்தரவாத விலையாக நிர்ணயிப்பதாகக் கருதிக்கொள்க. இந்நிலையில்.

ஈ) நுகர்வோன் இழந்து உற்பத்தியாளன் பெற்றுக்கொண்ட மிகையது?

உ) சமூகத்துக்கு ஏற்பட்ட நன்மை யாது?
ஊ) சமூகத்துக்கு ஏற்பட்ட இழப்பு யாது?
எ) நுகர்வோனுக்கு ஏற்படும் செலவு யாது?
ஏ) அரசுக்கு ஏற்படும் செலவு யாது?
ஐ) உற்பத்தியாளன் வருமானம் யாது? (புள்ளி - 09)

4. பொருட்களுக்கிடையில் விலை நிரம்பல் நெகிழ்ச்சி வேறுபடுவதற்கான காரணங்கள் தருக? (புள்ளி – 03)

## பகுதி II

5)

1. குறுங்கால உற்பத்தித் தொழிற்பாட்டில் குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி தொழிற்படுவதற்கான காரணங்கள் எவை? (புள்ளி - 03)
2. மொத்த உற்பத்திக்கும், எல்லை உற்பத்திக்கும் மற்றும் சராசரி உற்பத்திக்கும் எல்லை உற்பத்திக்கம் இடையிலான தொடர்பினை ஒரே வரைபடத்தில் வரைந்து விளக்குக? (புள்ளி – 05)
3. சராசரி மொத்தச் செலவுக்கும் எல்லைச் செலவுக்கும் இடையிலான தொடர்பினை வரைபடத்தின் உதவியுடன் விளக்குக? (புள்ளி – 04)
4. குறுங்கால சராசரிச் செலவுக் கோட்டின் வடிவத்திற்கும் எல்லை விளைவு விதிக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக? (புள்ளி – 04)
5. நீண்டகால சராசரி செலவு வளைகோட்டின் வடிவத்தினைத் தீர்மானிக்கும் விதியினை விளக்கி அதன் மூன்று வகைகளையும் குறிப்பிடுக? (புள்ளி – 04)

6)

1. பொருளாதாரச் சிக்கனமின்மை என்றால் என்ன? அது ஏற்படுவதற்கான காரணம் யாது? (புள்ளி – 04)
2. தனியுரிமை சந்தைக்கும் நிறைபோட்டி சந்தைக்கும் இடையிலான ஒற்றுமை யாது? (புள்ளி – 04)
3. குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றின் வெளியீடு 20 அலகுகளாக இருக்கும் போது சராசரி மாறும் செலவு ரூபா 15 ஆகும், சராசரி மொத்தச் செலவு ரூபா 25 ஆகும். வெளியீட்டை 40 அலகாக அதிகரித்த போது எல்லைச் செலவு ரூபா 10 ஆகும். மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

அ) 40 அலகு வெளியீட்டில் மொத்தச் செலவு யாது?

ஆ) 40 அலகு வெயியீட்டில் மொத்த வருமானம் யாது?

இ) நிறுவனம் 40 அலகுகளை உற்பத்தி செய்யும் போது நட்டம் யாது?

ஈ) நிறுவனம் தொடர்ந்து உற்பத்தியினை மேற்கொள்ளுமா அல்லது நிறுவனத்தை மூடிவிடத் தீர்மானிக்குமா? காரணம் தருக? (புள்ளி – 04)

உ) சிலர் உரிமைச் சந்தையில் புதிய நிறுவனங்கள் உள்நுழைவதை தடைசெய்யும் காரணிகள் எவை? (புள்ளி – 04)

4. மாற்றல் கட்டணம் சிக்கன வாடகை என்னும் பதங்களை வேறுபடுத்து? (புள்ளி – 04)

7)

1. பேரினப் பொருளாதாரத்தின் செயற்பாட்டினைத் தீர்மானிக்கும் பிரதான மாறிகள் எவை? (புள்ளி – 04)
2. பேரினப் பொருளாதார நோக்கங்கள் எவை? அவ் நோக்கங்களை அடைவதற்கு பயன்படும் பேரினப் பொருளாதாரக் கொள்கைகள் யாவை? (புள்ளி – 04)
3. பேரினப் பொருளாதார சமநிலை என்றால் என்ன? அச்சமநிலையை அடைவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய இரு நிபந்தனைகள் யாவை? (புள்ளி – 04)
4. வீட்டுத்துறை, நிறுவனத்துறை மற்றும் அரசதுறை ஆகிய மூன்று துறைகளும் தொழிற்படும் நிலையில் பேரினப்பொருளாதாரம் சமநிலை அடையும் விதத்தினை வருமான வட்டப்பாச்சலில் காட்டுக? (புள்ளி – 04)
5. பணப்பாச்சல் மற்றும் மெய்ப்பாச்சலினை வருமான வட்டப்பாச்சலின் உதவியுடன் விளக்குக? (புள்ளி – 04)

8)

1. ஒரு நாட்டின் மொத்தச் செலவின் கூறுகள் யாவை? (புள்ளி – 02)
2. அடிப்படை விலை, உற்பத்தியாளர் விலை மற்றும் கொள்வனவாளர் விலை என்பவற்றை வேறுபடுத்துக? (புள்ளி – 04)
3. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்ளடக்கப்படாத பயன்மிகு பொருளாதார நடவடிக்கைகள் எவை? (புள்ளி – 04)
4. நிறுவன அலகுகள் என்பதனால் கருதப்படுவது யாது? பொருளாதாரப் பரப்பில் செயற்படும் 5 வகை நிறுவன அலகுகளும் எவை? (புள்ளி – 05)
5. இலங்கையின் 2016 ஆம் ஆண்டுக்கான பேரினப்பெருளாதாரம் தொடர்பான கற்பனைத்தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விடயம் | பெறுமதி (ரூபா மில்.) |
|---|---|
| ஊழியர் நட்ட ஈடு | 100 |
| தேறிய தொழிற்பாட்டு மிகை | 200 |
| கலந்த வருமானம் | 150 |
| நிலையான மூலதனத்தின் நுகர்வு | 175 |
| உற்பத்தி மீதான உதவு தொகை கழித்த ஏனைய வரிகள் | 125 |
| உற்பத்தி மீதான உதவு தொகை கழித்த நேரில் வரிகள் | 75 |
| முதன்மை வருமான நிலுவை | 25 |
| இடைநிலை வருமான நிலுவை | 10 |

மேற்படி தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை கணிப்பிடுக?

அ) மொத்த தொழிற்பாட்டு மிகை யாது

ஆ) அடிப்படை விலை மொத்தப் பெறுமதி கூட்டல் யாது?

இ) சந்தை விலை மொத்த உள்நாட்டு உற்பத்தி யாது?

ஈ) மொத்த தேசிய உற்பத்தி யாது?

உ) செலவிடக்தகு மொத்த தேசிய வருமானம் யாது? (புள்ளி – 05)